இணைப்பு.

[.. 457....ம் பக்கத்திலுள்ள 99-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

தமிழ்நாட்டு கடற்கரையிலிருந்து உள் நாட்டுப் படகுகளையும் மீன்பிடிக் கருவிகளையும் கொண்டே தொலைகடலுக்குச் சென்று முன்பெல்லாம் மீன்பிடிக்கப்பட்டுவந்தது. 1955 முதல், விசைப் படகுகள் கட்டப்பட்டு அவற்றை மீனவர் தொகுதியினருக்கு வழங்குவதன் மூலம் மீன்பிடி படகுகளை இயந்திர மயமாக்குதல் குறித்து தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விசை மீன்பிடிப்படகுகளுடன் பல்வேறு மீன்பிடி முறைகளுக்குப் பொருத்த மான பல்வேறு தரமுள்ள செயற்கை முறுக்குநூலும் மீனவர் தொகுதியினருக்கு வழங்கப்படுகின்றன. பருத்தி நூலினுலான வலை களைக் காட்டிலும் செயற்கை முறுக்கிழைகளால் நெய்யப்பட்ட வலைகள் அதிக அளவு மீன் பிடிப்பதற்கு உதவியாக இருப்பதாலேயே இந்த வலைகள் விசைப்படகுகளுடன் மீனவர் தொகுதியினருக்கு வழங்கப்படுகின்றன. துறை அமைத்துள்ள பயிற்சி நிலையங்களில் மீனவர்களுக்கு மீன்பிடிப்பதில் தற்கால முறைகளில் பயிற்சி அளிக்கப் படுகிறது. பிடித்த மீன்களை பதனப்படுத்துவதற்கென பல்வேறு இடங்களில் பனிக்கட்டி, குளிர்பதன நிலையங்கள், பனி உறை நிலை யங்கள், பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் தொழிற் சாலைகள் முதலியவையும் நிறுவப்பட்டுள்ளன. எந்த இடங்களி லிருந்து விசைப்படகுகள் இயக்கப்படுகின்றனவோ அந்த இடங் களில் துறைமுகங்கள், தோணித் துறைகள் ஆகியவற்றைக் கட்டு வதன்மூலம் படகுகளைக் கரை சேர்ப்பதற்கும் அவற்றை விட்டு வைப்பதற்குமான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

The fishing off Tamil Nadu Coast was previously confined to indigenous crafts and tackle. Since 1955 continuous efforts have been taken to introduce mechanisation of the fishing crafts by constructing and distributing mechanised boats to fishermen groups. Along with mechanised fishing boats, synthetic twine of different construction suitable for different types of fishing, is also distributed to fishermen groups, as nets fabricated with synthetic twine bring in a better catch when compared to nets made of cotton. Training in modern methods of fishing is given to fishermen in the training centres established by the Department. Ice and Cold Storages, freezing plants and canning factories have also been established at various centres for processing the catches. Landing and berthing facilities by constructing harbours and jetties are provided at various centres for the mechanised boats operating from those centres.